*ஊடக அறிக்கை*

# ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யுனிசெ∴ப்) மற்றும் ரோட்டரி சர்வதேசம் இணைந்து இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு அவசியமான உயிர்காக்கும் பொருட்களை வழங்குகிறது

கொழும்பு/காத்மாண்டு, 22 ஆகஸ்ட் 2022 - இலங்கையில் தற்போது பொருளாதார நெருக்கடியானது தீவிரமடைந்துள்ள நிலையில், நாட்டில் உள்ள சிறுவர்கள் மற்றும் குடும்பங்களுக்கு உயிர்காக்கும் மருந்துகள், சுத்தமான குடிநீர் கற்றல் உபகரணங்கள் மற்றும் பிற முக்கிய பொருட்களை வழங்க ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யுனிசெ∴ப்) மற்றும் சர்வதேச ரோட்டரி என்பன கூட்டு சேர்ந்துள்ளன.

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கை சமூகத்திடமிருந்து நிதி திரட்டுவதற்காக இலங்கையின் முன்னணி பாடசாலைகளின் பழைய மாணவர்களுடன் இணைந்து சர்வதேச ரோட்டரியின் உலகளாவிய வலையமைப்பை இந்த கூட்டு இணைப்பு பயன்படுத்திக் கொள்ளும். தற்போது காணப்படும் நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களுக்கு உயிர்நாடியை வழங்குவதற்கு நலன் விரும்பிகள் https://lifelinesrilanka.rotary.unicef.org.au என்ற இணையத்தளத்தின் ஊடாக நன்கொடைகளை வழங்கமுடியும். யுனிசெ∴ப் ஆனது சேகரிக்கப்பட்ட நிதியினை நாடு முழுவதும் கடுமையான பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ள பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு ஆதரவாக அத்தியாவசிய மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், நீர் சுத்திகரிப்பு மாத்திரைகள் மற்றும் மாணவர்களுக்கான பள்ளி எழுது கருவிகளை கொள்வனவு செய்ய பயன்படுத்தும்.

இந்த குறித்த பங்காளித்துவமானது இன்று கொழும்பில் தெற்காசியாவிற்கான யுனிசெ∴ப் பிராந்திய பணிப்பாளர் திரு. ஜோர்ஜ் லார்யா அட்ஜய் மற்றும் யுனிசெ∴ப் இலங்கை பிரதிநிதி திரு. கிருஸ்டியன் ஸ்கூக் உடன் இணைந்து சர்வதேச ரோட்டரியின் வலய பணிப்பாளர் திரு. எ.எச். வெங்கடேஷ் மற்றும் இலங்கை ரோட்டரியின் மாவட்ட ஆளுநர் திருமதி. புபுது டீ சோய்ஷா ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

“யுனிசெ∴ப் ஆனது சர்வதேச ரோட்டரியுடன் ஒன்றினைந்து கூட்டாக செயற்படுவதில் மகிழ்ச்சியடைகின்றது. இந்த கூட்டமைப்பானது சரியான நேரத்தில் உருவாகியுள்ளது. குடும்பங்களானது தமது அன்றாட தேவைக்கான உணவை வாங்குவதங்கு சிரமப்படுகின்றனர். அத்தோடு மருந்துகளின் இருப்புக்கள் வேகமாக குறைந்து வருகின்றன, மற்றும் பள்ளிகளில் அடிப்படையான எழுதுகருவிகள் இல்லை. நேரமானது மிகவும் முக்கியமானது, அத்தோடு அதிகமாக பாதிக்கப்படக்கூடிய சிறுவர்கள் மற்றும் குடும்பங்களின் தேவைகளை நாங்கள் மிகவிரைவாக பூர்த்தி செய்ய வேண்டும்.” என்று யுனிசெ∴ப் பிராந்திய பணிப்பாளர் திரு. ஜோர்ஜ் லார்யா அட்ஜய் கூறினார். “இந்த கூட்டமைப்பின் ஊடாக எங்களது ஒருங்கினைந்த பலம் அதிகம் தேவைப்படும் குடும்பங்களுக்கு உரிய நேரத்தில் ஆதரவை வழங்க உதவும் என நாங்கள் நம்புகிறோம்.” என அவர் கருத்தளித்தார்.

இலங்கையில் அமைந்துள்ள யுனிசெ∴ப் மற்றும் ரோட்டரி அணிகளைப் பாராட்டி, சர்வதேச ரோட்டரியின் வலய பணிப்பாளர் திரு. எ.எச். வெங்கடேஷ் கருத்து தெரிவிக்கும் போது, "குறித்த முன்மொழிவினை பற்றி ஆலோசிப்பதற்காக சர்வதேச ரோட்டரி குழு கூடியபோது இந்த தனித்துவமான கூட்டாண்மை யோசனையை ஆதரிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். எமது சபையானது இத்திட்டத்தினை முழுமையாக அங்கீகரிப்பதுடன், இந்த இக்கட்டான சூழ்நிலையில் இலங்கைக்கு ஆதரவளிப்பதில் நாட்டிலுள்ள ரோட்டரியர்கள் முக்கியப் பங்காற்றுவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம்."

ரோட்டரி சார்பாக கருத்து கூறிய சர்வதேச ரோட்டரியின் முன்னாள் உலகளாவிய தலைவர் கே.ஆர். ரவீந்திரன், "இந்த இரண்டு மதிப்புமிக்க அமைப்புகளும் ஒன்றுசேர்ந்து (ஒருவேளை முதல் முறையாக) சிரமத்திற்கு உள்ளாகியுள்ள ஒரு தனி தேசத்திற்கு உதவுவதற்கு தங்களது ஆதரவை வழங்குவதில் இந்த வரலாற்று தருணத்தின் முக்கியத்துவம் கண்டுள்ளது." என்றார்

ரவீந்திரன் தொடர்ந்து கூறுகையில், "இத்தகைய ஒற்றுமை முழுமையான நம்பகத்தன்மையை உருவாக்குகின்றது, வெளிப்படையான தன்மை மற்றும் வெற்றிக்கான பொறுப்புக்கூறல் ஆகிய பண்புகளை கொண்டிருக்கவேண்டும் மற்றும் இரு நிறுவனங்களும் இந்த பண்புகளை ஏராளமாக கொண்டிருக்கின்றன. இதன் மூலம் உலகெங்கிலும் வாழும் இலங்கையர்களுக்கு உயிர்காக்கும் காரணங்களுக்காக அந்தந்த நாணயங்களில் நன்கொடையை வழங்குவதற்கான வாய்ப்பை வழங்குகின்றது அத்தோடு அவர்களின் நிதியானது சிறந்த முறையில் பயன்படுத்தப்படுகின்றது என்பதை அறியமுடியும்."

இலங்கையில் தற்போது காணப்படும் நெருக்கடியானது 2.3 மில்லியன் குழந்தைகள் உட்பட 5.7 மில்லியன் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற முக்கிய சமூக சேவை அமைப்புகள் அவற்றின் எல்லை வரை நீட்டிக்கப்பட்டுள்ளன. **யுனிசெ∴ப் ஆனது இலங்கையில் அதிகம் பாதிக்கப்படக்கூடிய குழந்தைகள் மற்றும் குடும்பங்களின் முக்கியமான தேவைகளைப் பூர்த்தி செய்ய அவசர உதவிகளை கோரியுள்ளது.**

யுனிசெ∴ப் மற்றும் ரோட்டரி ஆகியவை 1988 ஆம் ஆண்டிலிருந்து நீண்டகால ஒத்துழைப்பைக் கொண்டுள்ளன, குறிப்பாக பல்வேறு பிராந்தியங்களில் போலியோவை ஒழிப்பதற்கான உலகளாவிய முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

**#####**

**பல்லூடக இணைப்பு:**

- பல்லூடகம்: https://uni.cf/3whClB7
- நிதி திரட்டும் பக்கம் : https://lifelinesrilanka.rotary.unicef.org.au
- இலங்கை யுனிசெ∴பின் வேண்டுகோள்: https://www.unicef.org/appeals/srilanka

***மேலதிக தகவலுக்கு தொடர்பு கொள்ளவும்:***


- சுசானே வூஷ்டர் - பிரேமதிலக, இலங்கை யுனிசெ∴ப்,
  +9477 316 5378/ swooster@unicef.org

- ப்ரவரன் மகத், தெற்காசிய யுனிசெ∴ப்,
  +977 98020 48256/ pmahat@unicef.org

- டினலி டன்டேனியா, இலங்கை மற்றும் மாலைத்தீவு ரோட்டரி ஒருங்கிணைப்பாளர் (மாவட்டம் 3220),
  + 9477 738 1333/ dinalibd@hotmail.com